4. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின்(3)-வது உட்பிரிவின்படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். சுரேந்திரன் அவர்கள் மாண்புமிகு சுகாதார – அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(அ) மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீரினால் அண்மையிலுள்ள கிணற்று நீர் பாதிக்கப்படுதல்.

திரு. எம். சுரேந்திரன்.— தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார–அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மேட்டூர் ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் அருகாமையிலுள்ள கிராமங்களின் கிணறுகளில் தண்ணீர் கெட்டும் குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசியம் பற்றி"

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையும் இரசாயன-பிளாஸ்டிக் தொழிற்சாலையும் வெளியிடும் கழிவுநீர் புதுசம்பள்ளியில் உள்ள கால்வாய்களின் நீருடன் கலப்பதால் அண்டையிலுள்ள குடிநீர்க் கிணறுகளிலும் பாசனக் கிணறுகளிலும் நீரின் தூய்மை கெட்டு விட்டது என்று அரசாங்கத்துக்கு முறையீடுகள் வந்துள்ளன. (தொழில் துப்புரவு) பொது சுகாதார உதவி இயக்குனரும், தொழிற்சாலைகளின் மேற்பார்வையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முதுநிலை அதிகாரியும் இது குறித்து ஆய்வு செய்தனர். இத் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீரை அகற்றுவதற்கான முறைகள் குறித்து அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். தொழிற்சாலைகளின் கழிவுநீர் மேற்சொன்ன கால்வாயுடன் சேருவதை நிறுத்தி விட்டதாகவும், மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீர் சரிவரத் தூய்மைப் படுத்தப்பட்ட பிறகு, குழாய் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் விடப்படுவதாகவும், இரசாயன-பிளாஸ்டிக் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் தூய்மைப் படுத்தப்பட்ட பிறகு அகற்றப்படுவதாகவும் அத் தொழிற்சாலைகள் அறிவித்துள்ளன. கழிவு நீரை அகற்றுவதற்கென இரண்டாவது தொழிற்சாலை குழாய்களை அமைத்து வருகிறது. 1969 ஜூன் இறுதிக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலையை விரைவாக முடிக்க வேண்டுமென்றும், கழிவுநீர் அகற்றப்படுவதற்கு முன்பு நன்கு தூய்மைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசு வற்புறுத்திக் கூறியுள்ளது.